கடையம் (வளைசை) கலியாணியம்மை பிள்ளைத்தமிழ்
திருப்புலியூர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் இயற்றியது

kaTaiyam kaliyANiyammai piLLaittamiz

by tiruppuliyUr azakiya tirucciRRampala tEcikar

In tamil script, unicode/utf-8 format

Acknowledgements:

Our Sincere thanks go to the publisher Mr. Kumbapada Sekharan of Tirunelveli for providing a scanned PDF of this work.

This e-text has been prepared using Google OCR online tool and subsequent proof-reading of the output file.

We thank Mrs. Meenakshi Balaganesh, Bangalore, India for her assistance in the preparation of this work.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

© Project Madurai, 1998-2021.

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.

Details of Project Madurai are available at the website

https://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

கடையம் (வளைசை) கலியாணியம்மை பிள்ளைத்தமிழ்
திருப்புலியூர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் இயற்றியது

Source:

கடையம் (வளைசை) கலியாணியம்மை பிள்ளைத்தமிழ்
பதிப்பாசிரியன்: கம்பபாதசேகரன், ஆதீன சமயப்பரப்புனர், நெல்லை.
கடையம், அருள்மிகு. வில்வவனநாத சுவாமி திருவாசக முற்றோதுதல் குழு மற்றும்
கடையம் ஸ்ரீ நித்யகல்யாணி சேவா சமாஜத்தினரின் பேருதவியுடன்
நவராத்திரி விழாவில் கடையத்தில் வெளியிடப்பட்ட கலைமகள் திருநாள் மலர்
வெளியிட்டோர் : கம்பன் இலக்கியப் பண்ணை.
பிட்டாபுரத்தம்மன் கோயில்தெரு, திருநெல்வேலி நகர் - 627 006.
வள்ளுவம் 2046ம் ஆண்டு துலை 4ம் நாள் முரசு 21.10.2015
க.ஆ. 1130, விளைநிலம் : 173
பிள்ளைத்தமிழ் களஞ்சியம் 2. ஸ்ரீ நித்ய கல்யாணி சேவா சமாஜம், கடையம்.

கடையம் (வளைசை) கலியாணியம்மை பிள்ளைத்தமிழ்

இராமநதி அருவிவீழ் மாமலையி னடிவாரம்
தேமதுரக் குயிலோசை தேன்ததும்பும் சோலைதனில்
நாம்மகிழ நலமெல்லாம் நல்குநித்ய கல்யாணி
நாமந்தனை நவில்வார்க்கு நண்ணும் பேரின்பமே.

இராசராசசோழர், நாதமுனிகள், உ.வே.சாமிநாத ஐயர், மு.ரா. அருணாசலக் கவிராயர், புட்பரத செட்டியார் - திருமுறையை, திவ்விய பிரபந்தத்தை, காப்பியங்களை, சிற்றிலக்கியங்களை, செப்பேட்டிலும், பட்டோலையிலும், அச்சிட்டும் பைந்தமிழ் செல்வங்களை உலகிற்கு அளித்த சான்றோர் இவர்கள் திருவடிகளுக்கு துறைசை ஆதீன 23-வது சந்நிதானம் சிவப்பிரகாச தேசிக மூர்த்திகள் அவர்கள் ஆணையிட்டபடி இந்நூலை பதிப்பித்து படிமக்கலமாக படைக்கின்றேன்.

– கம்பபாதசேகரன்

கலியாணியம்மை பிள்ளைத்தமிழ் ஆசிரியரின் ஊரும், பேரும் கூறும் பாடல்

திருமகள் நடன மிடுபுகழ் வளைசைத் தெசரத ராமவீச் சுரனுக்
கிருகணின் மணியா முமைகலி யாணிக் கிளமைசேர் திருவிளை யாடற்
பருவமீ ரைந்தும் விருத்தநற் பாவிற் பப்பத்துப் பாடிநன் களித்தான்
அருள்விளைந் திருக்குந் திருப்புலி யூர்வாழ் அழகிய திருச்சிற்றம் பலமே.

இப்பாடலில் நூலாசிரியரின் ஊர் திருப்புலியூர் என்பதும் பெயர் திருச்சிற்றம்பலம் என்பதும் தெரியவருகிறது. இந்த திருப்புலியூர் சிற்றம்பலம் என்பவர் தான் தென்காசி தலபுராணத்தை பாடி ஆசிரியராக இருப்பார் என கருதப்படுகிறது.

ஓம்

திருப்புலியூர் அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் இயற்றிய திருநெல்வேலி மாவட்டம் அம்பை வட்டம் கடையம் (வளைசை) கலியாணியம்மை பிள்ளைத்தமிழ்

1. காப்புப்பருவம்

திருமால்

பார்கொண்ட திண்டிறல் பல்புவன பந்திப்
பரப்பைப் புரக்கவேண்டிப்
பாண்டிப்பி ராட்டிபெறு செல்வியைச் செல்வப்
பழந்தேவனைப் புணர்ந்த

வார்கொண்ட கும்பக் கதம்பப் படீரமுலை
வஞ்சியைச் செஞ்சொல்வளரும்
வளைசை மாநகர் மருவுகலி யாணசுந்தர
மனோன்மணி தனைப்புரக்க

தார்கொண்ட பைந்துளவ மருமத்தி டைத்தங்கு
தவமறைத் தையலீன்ற
சதுர்முகனை முதலிட்ட புத்தேளிர் யாரும்
தனித்தனி விரும்பிநிற்பச்

சீர்கொண்ட மந்தரச் சிகரியில் பஃறலைச்
சேடனுட லைப்பிணித்துத்
தெண்டிரைக் குரைகடல் கடைந்தமு தளித்திட்ட

செங்கட்கருங் கொண்டலே! (1)

சிவபெருமான்

வரியளி குமுறிய மடல்விரி யிதழியின்
மதுமழை மாறாத வார்சடைக் காட்டினர்
மழையிருள் எனவிடம் உமிழ்தரு கணபண
மணிவெயில் கால்வீசு மாசுணப் பூட்டினர்
மதனெரி படநுத லழல்பொழி விழியினர்
மலரடி மேலேறு மாமறைப் பாட்டினர்
மலைநிகர் புயமிசை யொருபுடை யணிகுழை
யொருபுடை மேனீடு வால்வளைத் தோட்டினர்
சருவென முனிவர் மனைபுகு முனமவர்
தளிரிய லார்தேடு தாதகிச் சூட்டினர்
தமனிய வரைபொரு மகலிய வுரமிசை
பிறைவட மாயாடு சூகரக் கோட்டினர்
தவளவெண் நிலவுமிழ் பொடியணி நுதன்மிசை
தருணநிலா வீசுதாழ் பிறைக் கீற்றினர்
சதுர்மறை பரவிய தமிழ்வளை சையிலுறை
தசரத ராமீசர் தாள்களைப் போற்றுதும்
பொருமிய கவுணிய மழமுகில் பருகிய
புணரிசெய் பாலூறு பூண்முலைப் பார்ப்பதி
புவனை கவுரிதிரி புரையென வறிவொடு
புகல்பவர் நாவேறு பூவையைப் பூத்தொளிர்
பொலன்முக டளவிய பனிவரை யதிபதி
புணர்தரு பேராசை மேனைமுத் தாட்டிய
புதல்வியை முதல்வியை மழகளி றெனவரு
புதல்வனை யீராறு தோள்வரைச் சூர்ப்பகை
அரசனை மகவென அருளிய வனிதையை
அலைகடல் போலாரும் ஆகமச் சூழ்ச்சியை
அருவென உருவென உளதென இலதென
அகிலமு மானாளை யாகமக் காட்டினில்
அனுதின நடமிடு மரகத மயிலையென்
அறிவினி லூடாடு நீளொளிக் காட்சியை
அடியவர் மனதினில் நினையுமுன் னுதவிய

அருள்நிதி போல்வாள் கல்யாணியைக் காக்கவே! (2)

விநாயகர்

இனிதுற வாய்த்தநன் கதையைப் பொருப்பினில்
எழுதிய கோட்டுவெங் கரடக் களிற்றினை
வனமலர் பூத்ததிண் புயவெற் பனைப்புகழ்
வளைசையின் மூர்த்தியைங் கரனைப் பழிச்சுதும்
கனிதமி ழாற்செறிந் தவர்க் கருட்கடல்
கலைவளர் கீற்றிளம் பிறையைத் தரித்திடு
தனிமுதல் பால்புணர்ந் தவளைக் கருத்தொடு
தசரதன் வாழ்த்து பைங்கிளியைப் புரக்கவே! (3)

முருகன்

கோதறு மலர்க்குவளை பூத்தொளி நிரம்புமொரு
கோகனகம் விண்டலர்ந்து
குமிழ்முகிழ் விரிந்தொழுகு தமிழமு தரும்புமிரு
கோங்கலர் பொலிந்துமெள்ளப்

பாதவ ரையில்கொடு முடித்தலை வணங்கவும்
பைம்பொன் வரையைக்கிழித்துப்
பவளா சலத்தில் படர்ந்தேறு பச்சைப்
பசுங்கொடி தனைப்புரக்க

வேதனை யழைத்தொரு சிரத்திடை புடைத்துமறை
வித்தகனெ னத்தழைத்து
மிக்ககம லத்தரசி ருப்பினில் விருப்பினொடு
மேவிப்ப தாகைபெற்றி

ஓதிமமு யர்த்துயி ரனைத்தும் படைத்திறைதன்
உச்சியி னுவந்துகேட்ப

ஒருபிரணவத் திலுறுமுட் பொருளின் மெய்ப்பொருள்
உணர்த்து குமரக்கடவுளே! (4)

பிரமன்

இலகிச் சுடர்கால் வெண்சிறை யெகினப் பரியூர்தி நெஞ்சினில்
இழைமுப் புரிநூல் விளங்கிய இறைமைப் பழையோன் வசுந்தரை
முலையில் துயில்கூர் கரும்புயல் முகைவிட் டலர்நா பியஞ்சுழி
முளரிப் பெருமாள் பதங்களில் முடிவைத் தினிதாவ ணங்குவதும்
கலைகற் றவர்நா வுறைந்தவள் கருணைக் கடலாய் நிறைந்தவள்
கமழத் தருதார் புனைந்தவள் கயிலைக் கிரிமே லிருந்தவள்
மலையத் துவசமீ னவன்பெறு மதுரைத் தமிழ்நா டுகந்தவள்
வளைசைக் கலியாண சுந்தர மயிலைப்பரி வாய்மை தங்கவே! (5)

இலக்குமி

சிகரா சலத்தில் பணாமுடிப் பஃறலைச்
சேடனுடலைப் பிணித்துத்
தெண்திரை நெடுங்கடலை யண்டர் கடையத்துள்ளூ
தெள்ளமு துடன்பிறந்த

மகராலயத் தைநிகர் மைப்புயல் கவுத்துவ
மணிச்சுட ரெறித்தமார்பில்
மாகனக நெட்டிதழ்க் கோகனகவீட்டினில்
வசிப்பவளை யஞ்சலிப்பாம்

புகர்மா முகக்களிறு கன்றுக்கு வென்றிப்
புழைக்கர மெடுத்துநீட்டிப்
பொன்னாடு சுற்றும் பொழில் பசுங்கற்பகப்
பூந்தழை பறித்தருத்தும்

சகலாச னத்துக்கு மேலான வெள்ளித்

தடங்கிரி நெடுஞ்சாரலில்
தசரதன் வழுத்துமொரு தனிமுத லிடத்திறைவி
தன்னைப் புரக்கவென்றே. (6)

சரசுவதி

அண்டர் தொழுதிடுமால கண்டனிடத் தமர்ந்த
அருட்கடலை யிமயவரை யளித்தரு ளும்பால
துண்டமதி நுதற்கொடியை யண்டரண் டம்புரந்த
துரந்தரியைக் கலியாண சுந்தரி யைப்புரக்க
வண்டமிழின் வடகலையின் வடிவுறு மாஞான
மடுவுகுத்த பாலருந்தி மால்மக னான்முகத்தும்
விண்டமலர்ப் புண்டரிக மண்டபத்து மிருந்து
விளையாடு மொருபிள்ளை வெள்ளை யோதிமமே! (7)

சத்தமாதர்

புகலரு மருமறை யெண்ணித் தெரித்தவள்
புரமெரி படநகை முன்னிச் சிரித்தவள்
புரையறு மரியுற வண்ணிப் பரித்தவள்
பொருதிரை புகையவில் லுன்னிக் குனித்தவள்
பகுபடை பகைவரை பம்மப் பணித்தவள்
பலியிட வுயர்திரி தண்டக் கரத்தினள்
பருவத மெனவரு வெண்மைக் கயத்தினள்
பகரிவ ரெழுவர்கள் தம்மைப் பழிச்சுதும்
மகரச லதிவிட முண்ணப் படித்தவ
ரசுரர் பணிசெய விண்ணைப் புரக்குமோர்
மகபதி பகைதெறு கண்ணைப் படைத்தவர்
மலரயன் விறலரி கண்ணுக் கொளித்தவர்
சகதல முழுமுத லென்னத் தழைத்தவர்
தழுவிய கனதன மின்னைப் புனற்கரை
தவழ்குட வளைசொரி வெண்ணித் திலத்தொளிர்
தமிழ்வளை சையிலுமை தன்னைப் புரக்கவே. (8)

திக்குப்பாலகர்

மூதண்டகூடக் குலக்கிரி களைச்சிறை
முறித்ததிறல் வச்சிரபாணி
மோதுந்திரைக்கடல் சுருட்டுமொரு தென்கீழை
மூலையில் சித்திரபானு

மாதண்டனைக்குரிய தண்டாயுதக் கடவுள்
வாதினில் திறலரக்கன்
மகரவாகனமுடைய வாருண திசைக்கடவுள்
மண்ணுல கெலாம்பரித்த

வேதண்டகொடுமுடி நடுங்கப் பிடுங்குமுயர்
வேகப்பிர சண்டவாயு
வெற்பனையபுட்பக மிசைப்பொலி குபேரனவன்
வெண்மருப் பிடபவூர்தி

தீதொன்றிலாதவிவ ரெண்மருந் தாம்பெற்ற
திசைதொறுஞ் சென்றுநின்று
சீர்வளைசையூர்காத்த கல்யாண சுந்தரச்
செல்வியைக் காத்தருளவே! (9)

முப்பத்து முக்கோடி தேவர்

மரகதமணிக் கற்கள் பாசொளி பிறங்கவருள்
வண்மைக் குணத்தினொளியை
மன்னவர்கள் மன்னனாந் தென்னன்மக ளென்னவரு
வன்னப்பசுங் கிள்ளையை

இரசிதசபா நடுவில் எம்பிரான் செய்ந்நடனம்
எய்துகால் மாற்றுயர்ந்த

தென்றுகண் டுவகையுறும் வளைசைநக ரமர்தரும்
எம்மனையை யினிதுகாக்க

திரைதிரைத் தெறியும் கடற்புவி யிருட்டறச்
செங்கதிர் பரப்பியொற்றைத்
திண்சகட் டெழுபுரவி சண்டா நிலம்பொரத்
திண்தேர் நடாத்திநிற்கும்

பரிதிகள் மருத்துவர் வசுக்கண ருருத்திரர்கள்
பன்னிருவ ரிருவரெண்மர்
பதினொருவ ரெனவைத்த முப்பத்து முக்கோடி
பண்ணவர் மகாசமுகமே! (10)

----

2. செங்கீரைப் பருவம்

நறும்புன லெடுத்தாட்டி யீரம்பு லர்த்தியிசை
நாவசைத் தழுகைமாற்றி
நாவேறு கண்ணேறு வாராமல் வெண்ணீறும்
நன்னிலப் பொட்டுமிட்டுக்

குறுந்தொடி சிலம்புகிண் கிணிதண்டை பாடகம்
குளிர்மணிக் காஞ்சிகாரை
குழையில் குதம்பைமுதல் யாவையும் அணிந்துகட்
குவலயங் களிசிறப்பப்

பெறுங்கனக வல்லியார் கைகொண்டெ டுத்துலகு
பெற்றசிற் றுதரநிறையப்
பெருகுமுலை யமுதூட்டி வைத்துமுத் தாட்டிமகிழ்
பிள்ளைமைப் பருவமெல்லாம்

சிறந்தமல யத்துவசன் வாரக் குமாரத்தி
செங்கீரை யாடியருளே!
செல்லார் கருங்குழல் கல்யாண வல்லியுமை
செங்கீரை யாடியருளே! (11)

நெல்வந்து கன்னலை நிகர்ப்பப் பசுங்கன்னல்
        நெட்டிலைக் கதலியேய்ப்ப
நெட்டிலைப் பூங்கதலி மரகத மடற்கமுகு
        நிகராகநீள் கமுகெலாம்

அல்வந்த வெண்கதிர்ச் சந்திரமண் டலமளவி
        யார்கலிப் புவியனைத்து
மாயிரம் பணமுடிப் பந்தியில் தாங்குரகன்
        அம்பொன் நாடும்பரிக்க

வில்வந் தரித்தசடை முக்கட்பிரா னருளின்
        மேலிட்டு எழுந்ததென்ன
வெண்கொடு முடிக்கோபுரக் கொடிகொள் மாடங்கள்
        மேவுமளகா புரமெனச்

செல்வந் தழைக்கத் தழைத்தவளை சைக்கிறைவி
        செங்கீரை யாடியருளே!
செல்லார் கருங்குழல் கல்யாண வல்லியுமை
        செங்கீரை யாடியருளே! (12)

மங்காத பொன்மலர்க் கற்பகா டவிசூழ்
        மலர்ப்பூங் கடம்பவனமு
மணிகொழித் தெறியுமமு தோததியுமொ ளிர்கின்ற
        மாபுட்ப ராகதீவும்

கொங்கார் மலர்த்திரளு மேவுமுயர் கயிலாய
        கோலவெண் கிரியின்மீது
கொன்றையந் தொடையலணி செஞ்சோதி யாயொரு
        கோயிலுள் குளிர்மதுப்பூம்

பைங்காவி யொத்தவிழி மாதங்கி யாதியர்

பணிவிடை யியற்றிநிற்பப்
பத்தரா கியமோன சித்தர்யோ கில்கண்டு
பரவிவழி பட்டுமகிழச்

சிங்கார மாக்கொலு விருக்கும் பசுஞ்சோதி
செங்கீரை யாடியருளே!
செல்லார் கருங்குழல் கல்யாண வல்லியுமை
செங்கீரை யாடியருளே! (13)

கம்பாச லப்பகடு ரித்துடுத்து ரையற்ற
ககனவட் டத்திலாடிக்
காணருந் துரிய துரியாதீத மொக்கக்
கடந்துபர யோகமெய்தி

அம்பான பன்மலர் எடுத்தமர் தொடுத்தசிலை
அங்கசன் எரிந்துசிறுதேர்
ஆகவரு தென்றலங் கன்றுங் கிடந்தலற
அழல்விழி திறந்துகருதார்

மொய்ம்பான முப்புரமு மொக்கவெரி பட்டழிய
முகிழ்நகை திறந்துஞான
முத்திரை யளித்தரிய மோனம் புரிந்ததிரு
முக்கணான் செக்கர்மேனிச்

செம்பாதியுங் கொண்ட மரகதக் கலாபமயில்
செங்கீரை யாடியருளே!
செல்லார் கருங்குழல் கல்யாண வல்லியுமை
செங்கீரை யாடியருளே! (14)

வள்ளத் தடஞ்சுனை குடைந்தாட அஞ்சுமிடை
வஞ்சிக் குறிஞ்சிமடவார்
வளர்செந் தினைப்புனங் காக்குமிதண் மீதேறி

மைக்கருங் கூந்தல்சாயத்

துள்ளித் துடித்தகயல் மைக்கண் குறிக்கொளத்
துங்கமென் கொங்கைபொங்கத்
தொட்டிட்ட வள்ளைப் பொலங்குழை யிலங்கச்
சுடர்க்காந்த ளங்கைமலரால்

அள்ளிக் கதிர்ப்பற்ப ராகமணியைப் புதைத்து
ஆடல்கவண் கல்வீசி
அமுதங் கனிந்தூறு குமுதங்களைத் திறந்து
ஆவாயெனப் புள்ளோச்சும்

தெள்ளித் தெளிந்ததமிழ் வெள்ளிக்கிரிக் கிறைவி
செங்கீரை யாடியருளே!
செல்லார் கருங்குழற் கல்யாண வல்லியுமை
செங்கீரை யாடியருளே! (15)

பொன்னஞ் சிறைச்சுரும் பிசைபாடு மம்புயப்
புரிமுறுக் குடையநீண்ட
பொற்கோ புரக்கொடு முடிக்கொடி மதிற்கிடை
புகத்தேரி ழுத்துயர்ந்த

கன்னம் படைத்தபரி கால்கதி யரைப்படக்
கால்குனித் துடல்குலுக்கக்
கண்ணும் பிழைத்தருண னெண்ணுந்தி கைப்பவெதிர்
கண்டவர்க ளதிசயிப்பப்

பண்ணுங் கதிர்கரமு மொக்கப் பரப்பிப்
பனிப்பகை பரக்கமன்னும்
பன்மணிக் கோமறுகு சுற்றுமது ரைத்தமிழ்ப்
பாண்டிநன் னாடுகாத்த

தென்னன் சிறுப்புதல்வி பொன்னங்கிரிக் கிறைவி
செங்கீரை யாடியருளே!

செல்லார் கருங்குழல் கல்யாண வல்லியுமை
        செங்கீரை யாடியருளே! (16)

வாராடு கும்பமுலை மேனை பெறுவாரக்
        குமாரத்தி யென்னமன்னி
வான்முக டளந்தபனி மால்வரைக் கன்னியர்
        மருங்குற நெருங்கமொய்த்துக்

காராடும் முச்சிவரை யருவித் தடாகமுங்
        கஞ்சத்தடஞ் சுனைகளும்
கழுநீர் முறுக்கவிழு நெட்டோடை யும்புதுக்
        கற்பகச்சோ லையும்போய்

நீராடி யம்மனை கழங்குபந் தித்தனையு
        நின்றாடி மன்றாடுவார்
நெஞ்சூச லாடவே பொன்னூச லாடியருள்
        நீலக்கலாப மயில்போல்

சீராடி விளையாடு மருமைப்பெண் ணென்னம்மை
        செங்கீரை யாடியருளே!
செல்லார் கருங்குழல் கல்யாண வல்லியுமை
        செங்கீரை யாடியருளே! (17)

வேறு

வந்தனையேபுரி யும்பெரியோர்மன தன்பால் மின்போலே
        வந்தொளிர் சாமளசுந்தர மேனியுமந்தா ரஞ்சூடும்
குந்தளபாரமு மந்திநிலா நுதலுஞ் சேலுங்காதும்
        குங்குமபார கதம்பபயோதர முந்தேனும் பாலும்
உந்தியநீள்புள கங்கள்சிலீரென ஒன்றாய் வந்தூறும்
        உம்பரளாவு பொலன்கிரிராசன் உவந்தோதுந் தோறும்
செந்துவர்வாயிதழ் விண்டமனோன்மணி செங்கோ செங்கீரை!
        திங்களைநேர்முக மங்களநாயகி செங்கோ செங்கீரை! (18)

அங்கையில் வால்வளை நின்றுகலீரென அஞ்சேலஞ்சேல்நீ
யஞ்சலியார் செயினுந் திருவருள்செய் யணங்கேயென்றோதிப்
பங்கயமாளிகை மின்கொடிபாரதி என்போர் மின்போலே
பந்திவிடாவொரு சிந்துரரேகை பகுந்தே செந்தேனார்
கொங்கலர்சூடு கங்குழல்வாரி குடைந்தே வந்தேறும்
கொண்டலை நேர்தருமென்றே கண்டவர் கூறமருங்காரும்
செங்கயல்போலு நெடுங்கண் மனோன்மணி செங்கோசெங்கீரை!
திங்கள் நேர்முக மங்களநாயகி செங்கோசெங்கீரை! (19)

சந்திரசூரிய ரிந்திரன்மாலயன் என்றோதுந் தேவர்
தண்கடல் சூழ்தரும் எண்டிசைகாவல் புரிந்தோர்பண்பாக
வந்தனைகூர் மலரம்புய பாதமிதென் றேயன்பாக
வண்கையினாலிரு கண்களினூடு புனைந்தா கந்தோறு
முந்தியநீள் புளகங்கள் சிலீரென வொன்றாய்நின்றோத
உம்பரளாவு பதங்களுவந் தருளுந்தாய் நந்தாத
சிந்துரநேர்நுத லம்பிகைகாரணி செங்கோ செங்கீரை!
திங்களைநேர் முகமங்களநாயகி செங்கோ செங்கீரை! (20)

----

3. தாலப்பருவம்

மயிலைப் பொருவுஞ் சிறுசாயல்
மாதர்க் கரசசென் றிறுமாந்த
வள்ள முலைப்பா லமுதூட்டி
மழலைகலந் துவளைக் கையால்

பயிலத் தயிலப் புனலாட்டிப்
பச்சைக் குழந்தையு டல்குலுக்கிப்
பட்டாலீ ரம்புலர்த் திநுதற்
பரிந்தநிலக் காப்பணிந்து மைக்கண்

அயிலைப் பிணைக்கஞ் சனம்தீட்டி

யரைஞா ணிறுக்கி வளைதிருத்தி
யசைக்குங் குதம்பை தூக்கியுச்சி
யமைத்து சுடிகை யணிந்துமணிச்

சயிலத்தரசி வளர்க்க வளருந்
தாயே தாலோ தாலேலோ!
தமிழ்தேர் வளைசைக் கலியாணித்
தாயே தாலோ தாலேலோ! (21)

கழைக்குன்ற னைத்தும டுப்படுக்கிக்
கடலேழையுந் தண்புன லமைத்துக்
கணக்குக் கடங்கா மூதண்டக்
கலன்கள டுக்கிக்கடைக் கனலிட்டு

இழைக்குங் குமமாமுலை மடவார்
எல்லாங் கூடவிரு வினையும்
தந்தமிசையச் சமைத்தீ ரேழுலகும்
என்வீடுன் வீடெனப் பணித்துக்

குழைக்கும் குமிழ்க்குநடந் தோடும்
கூர்வேல் விழியால் துடக்குண்ட
கொன்றைச் சடையான் நின்றிரப்பக்
குறுவாள்முறு வல்விளைத்த னைத்துந்

தழைக்கும் படிக்குச் சிற்றிலிழைத்
தாயே தாலோ தாலேலோ!
தமிழ்தேர் வளைசைக் கலியாணித்
தாயே தாலோ தாலேலோ! (22)

பம்புஞ் சிறைவண் டிசைபாடும்
பங்கேருகத் தண்குளக் கரையில்
பவளக் கனிவாய் மலர்ந்துதிசை

பார்த்துப் பொருமி யழக்கண்டு

வெம்புந் தழற்கைக் கடவுளொடும்
வெள்ளை விடைமேல் எழுந்தருளி
விழிநீர் துடைத்து வெரிந்தடவி
விரிபொற் குழுவின் நிரம்புமணிக்

கும்பந் தனையொத் திறுமாந்த
கொம்மை முலைப்பால முதளித்துக்
கூறுந்தமி ழுந்தண் டிகையும்
கொற்றக்குடை யுங்கொடுத்து முற்றும்

சம்பந்தனை ஆதரித்து வளர்த்
தாயே தாலோ தாலேலோ!
தமிழ்தேர் வளைசைக் கலியாணித்
தாயே தாலோ தாலேலோ! (23)

வாமம்பெ றுங்கைச்சிலை வளைத்து
வண்டுச் சிலைநாண் படக்கொழுவி
மதுக்கொப் புளிக்கும்ப கழிதொட்டு
மந்தாநிலத் தேரொடும் எதிர்த்த

காமன்படச் செங்கனல் விழித்த
கண்ணாரெண் ணாதெண்ணி யெண்ணிக்
காந்தளிருச் சூடகக் கைதொட்ட
கையால் சதங்கைத்தாள் பிடிப்பச்

சீமந்தவி ரேகையில் புனைந்த
செம்பொற் சுடிகை மணிவிளங்கத்
திங்கள் முகத்தாற் புறத்தொதுங்கும்
திமிரப்பொதி போற்செங் கழுநீர்த்

தாமஞ் சொருகிக் கூந்தல்முடித்
தாயே தாலோ தாலேலோ!

தமிழ்தேர் வளைசைக் கலியாணித்
        தாயே தாலோ தாலேலோ! (24)

தொடங்குஞ் சதுர்மா மறைப்படியே
        தூநீராடிக் குறை முடித்துச்
சோமக் கொழுந்தார் திருமுடிக்குத்
        துணர்ச் சிற்றறுகு மலர்சாத்திக்

குடங்குன்ற னையமுலை புதைத்துக்
        கும்பிட் டிறைஞ்சு மவ்வேலைக்
குடகா விரியும்பகீ ரதியுங்
        கோதா வரியும் புறஞ்சாய

முடக்குந் திரைக்கம் பாநதிக்குள்
        மோதும் செழுநீர்ப் பிரளயம்போல்
மோகப் பிரளயந் தந்து
        முக்கட் பெருமான் செக்கர்மணித்

தடங்குங் குமத்தோள் குழையவணைத்
        தாயே தாலோ தாலேலோ!
தமிழ்தேர் வளைசைக் கலியாணித்
        தாயே தாலோ தாலேலோ! (25)

வேறு
விண்பொதி யக்கிளர் சந்தச்சோலை வேழமருப் புதவும்
        வெண்முத்துந் திகழ்கண் முத்துந்திரை வெள்வளை யொண்முத்தும்
பண்பொதி யத்தமிழ்ப் பாடிப்பாடிப் பந்தா டுஞ்சூழல்
        பைம்புன மங்கையர் வாரியெடுத்துப் பண்டிகளில் கொண்டே
செண்பக மொய்த்துயர் சோலையில்மன்னிச் சென்னிச் சுமையாறுந்
        தெண்கட லுப்புத் தள்ளியளிக்குந் தெள்ளருவிச் சாரல்
தண்பொதி யத்தமிழ் நாடுபுரப்பவள் தாலோதாலேலோ!
        சாமளவல்லி கல்யாண சவுந்தரி தாலோதாலேலோ! (26)

கம்பிக்காதில் குண்டலமாடக் காதளவுஞ் சென்றே
கருணைத்திவ லைகிடந்தநெ டுங்கண்காவி புரண்டாடச்
செம்பொற்சுடிகைக் கதிர்மணியாடத் திருவரை ஞாணாடச்
செங்கைக்கதிர் வளையாடத் தண்டைசிலம்பு கலந்தாடப்
பைம்பொற்றொட் டிலுதைந்தாடிச்சிறு பால்நகை மேனைமுகம்
பார்த்துப்புன்னகை யாடிப்பனிமால் வரையர சன்பெற்ற
சம்பத்தென்ன வளர்ந்த பசுங்கிளி தாலோதாலேலோ!
சாமளவல்லி கல்யாண சவுந்தரி தாலோதாலேலோ! (27)

பண்டாசுரனைத் தூளிசெய்தன்னிரு பற்பபதம் பணியும்
பத்தர்தமக்கிடர் முற்றியதுட்டர் பயந்துமு றிந்தோடக்
கண்டார்பரவ வராகியெனத்தள கர்த்தவியம் பெற்றே
கனகக்கொங்கை மருப்புநெருப்புக் கக்குந் துணைவிழியும்
துண்டார்வெண் பிறையொத்த மருப்புஞ்சுடர் முடியுந்துடியும்
துண்ணெனவண்ட கடாகநடுங்கச் சுற்றும் கொற்றக்கைத்
தண்டாயுதமுங் கொண்டு நடந்தவள் தாலோதாலேலோ!
சாமளவல்லி கல்யாண சவுந்தரி தாலோதாலேலோ! (28)

சிந்தைக்ககேறத் திவவுவலித்துச் செம்மணி மாடகமும்
செவ்வில்முறுக்கித் தந்திரியில்கைச் சிறுவிரல் உகிர்சேப்பக்
கந்தத்தோடு கருங்குழலசையக் கைவளை பூசலிடக்
கத்தூரித்திலகம் பொலியச்சுடர் கைத்துடி நின்றாடல்
பந்தைப்போல்முலை விம்மச்சரிகம பதநியெனச் சொல்லிப்
பரவசமுற்றுக் கருவிழிசுழலப் பாடியரன் செவியில்
சந்தத்தேறல் வடித்த கருங்குயில் தாலோதாலேலோ!
சாமளவல்லி கல்யாண சவுந்தரி தாலோதாலேலோ! (29)

அரியயனுந்தொழ வவனிபுரந்தவள் தாலோதாலேலோ
அடியாரிடங்களி லுவகைசுரந்தவள் தாலோதாலேலோ

திரிபுரமெங்கணு மெரியமுனிந்தவள் தாலோதாலேலோ
சிவமெனவந்தவோர் பொருளைமணந்தவள் தாலோதாலேலோ
தரியலர்தங்களை யடரநடந்தவள் தாலோதாலேலோ
தமிழைவழங்கியென் மனத்துணிறைந்தவள் தாலோதாலேலோ
வரிவிழியிந்திரை பரவவிருந்தவள் தாலோதாலேலோ
வளைசைவளம்பதி தழையவளர்ந்தவள் தாலோதாலேலோ! (30)

----

4. சப்பாணிப் பருவம்

அமர்பொற் கற்பகச் சோலையில் விடாயாற
அயிராணி இன்பமெய்த
ஆகண்ட லன்பவனி வெள்ளானை மீதுவர
அன்றுவெஞ் சூரைவென்ற

குமரனைப் புகர்முகக் கவுண்மதத் திருசெவிக்
குஞ்சரக் கன்றையீன்ற
கோற்றொடி படாமிட்ட கும்பமுலை மேனைபுணர்
கோன்பெறுந் தவகுமாரி

நிமிர்தடக் கைக்களி றுரித்தசிவன் மனையாட்டி
நீலக்குறத் திமாமி
நித்திரை மறந்திரவு சஞ்சரிக் குங்கொடிய
நிருதரைப் பொருதடர்த்த

சமரசக் ராயுதக் கடவுளுக் கொருதங்கை
சப்பாணி கொட்டியருளே!
தசரத இராமீச் சுரத்திலுறை கல்யாணி
சப்பாணி கொட்டியருளே! (31)

விண்ணளவு கொடுமுடிகள் மூதண்ட மெட்டுமொரு
வேதண்ட மத்துநிறுவி
வெண்திரைப் பாலாழி யோர்தாழியா யமுதம்
இசையக்க டைந்தவந்நாள்

அண்ணலம் பஃறலைக் காகோத ரத்துடல்
அலைத்தழல் கண்பிதுங்கி
ஆயிரமுகம் புகைந்தந் தகாரஞ் சொரிய
அண்டர்கண் டலறிவீழக்

கண்ணனு டலங்கருகி வந்தடைய நின்றபய
கரதலமளித்த முக்கட்
கடவுளுக் கன்றுவெங் காளகூ டத்தைக்
களத்திலபி மந்திரித்துத்

தண்ணமுத மாக்கியருள் தாமரைக் கைகொண்டு
சப்பாணி கொட்டியருளே!
தசரத விராமீச் சுரத்திலுறை கல்யாணி
சப்பாணி கொட்டியருளே! (32)

குமிழெதிர் மறிந்துபொற் குழையெதிர் நடந்தபைங்
கூர்விழிக் கொம்பனையார்
கூடிவிளை யாடுந்த டஞ்சோலை தோறுமைக்
குயில்யா ழிசைவடிப்பக்

கமழ்தரு குடக்கனி உடைத்துண்டு கருமந்தி
கைத்தாள மொற்றிநிற்பக்
கற்றைப் பொலஞ்சிறைக் களிவண்டு பண்முரளி
காட்டக் கலாபமஞ்ஞை

இமிழ்புனல் காளமுகி லீட்டங்கள் கண்டுவெகு
நாட்டியமி யற்றிநிற்ப
இனிதுகண் டம்புயத் தரசமட வோதிமம்
இருக்குமா மருதவேலித்

தமிழ்வளைசை மருவுமபி ராமசுந் தரவனிதை
சப்பாணி கொட்டியருளே!
தசரத விராமீச் சுரத்திலுறை கல்யாணி

சப்பாணி கொட்டியருளே! (33)

கண்காந்து(ம்) வெம்பொறிப் பிறையெயிற் றெறுழ்வலிக்
கார்நிறப் போரரக்கர்
கருமாள விண்ணவரு(ம்) மண்ணவரும் வாழச்செய்
கல்யாண முற்றத்தின்வாய்

விண்காந்து(ம்) விரிசுடர்ச் சந்திரசூ ரியர்திரு
விளக்கேந்த விதியின்முறையே
வெள்ளையோ திமவூர்தி வேள்விக ளியற்றமணி
வெற்பரசி பெற்றவரிசைப்

பெண்காந்த னுக்கிசையு மென்றுகண் டோர்சொலப்
பெற்றபே றென்னயிமவான்
பெற்றமூ ரும்பிரானம் போருகக் கையில்
பெய்புனலி னூடமைத்த

தண்காந்த ளஞ்செங்கை சேந்தொளி துளும்பநீ
சப்பாணி கொட்டியருளே!
தசரத விராமீச் சுரத்திலுறை கல்யாணி
சப்பாணி கொட்டியருளே! (34)

குடம்புரை செருத்தலஞ் சேற்றடிக் கருமேதி
கொழுமலர் புண்டரிகமும்
கொடிபட்ட வள்ளையும் பற்கொடு கறித்துக்
குதட்டிக்கொ ழுத்தசைத்துக்

கடம்பெருகு பாலெனக் கதிர்முறை திறந்துதங்
கன்றுக்கி ரங்கிநின்று
கால்வாய்ச் சொரிந்தபால் குளவாய் நிறைந்துபாற்
கடலினைநி கர்ப்பவதனுள்

படம்புரை நிதம்பப் பிராமியென நெட்டிதழ்ப்
பங்கேருகத் தொட்டிலில்
பச்சைப் பசுந்தேரை தாலாட்ட வோதிமப்
பச்சிளம் பிள்ளைதுயிலுந்

தடம்புடை உடுத்தவளை சைப்பதி புரக்குமயில்
சப்பாணி கொட்டியருளே!
தசரத விராமீச் சுரத்திலுறை கல்யாணி
சப்பாணி கொட்டியருளே! (35)

காலினிறை சேற்றுக் கரும்பக டிணைத்துழுங்
கழனியில் துழனிபடலும்
காரளிகள் கமலத்தில் நின்றஞ்சி யோடுவது
கார்பெய்து கார்களேகல்

போலுழு மள்ளருள் ளங்களைத் திறைகொண்டு
புணர்முலைக் கடைசியர்கள்தம்
பூங்குமுத வாய்க்குரவை யார்ப்பநடும் வெண்ணாறு
புனல்பெருக்கத் தழைத்துப்

பாலமுத முட்கொண்டு சூல்பொதி யவிழ்ந்துமணி
படுகதிர்க் குலைகள்கற்புப்
பாவைய ரெனத்தலை கவிழ்ந்து விரசிதம்பொதி
பசும்பொன் னிகராகவளரும்

சாலிபுடை சூழ்மருத வேலிவளை சைக்கிறைவி
சப்பாணி கொட்டியருளே!
தசரத விராமீச் சுரத்திலுறை கல்யாணி
சப்பாணி கொட்டியருளே! (36)

வேறு

நம்பிவணங்கிய தேவர்க்கிடர்செய் நண்ணலர் முப்புரமாய்

நடுக்கிழிபட்ட நுதற்கணெருப்பி னலிந்தவந் நாள்முதலுன்
செம்பதுமச் சரணங்கள்பராவிய சித்தச னுக்காகச்
செஞ்சிலைபஞ்ச சரங்கள்தொடுத்த திருக்கை வருந்தாமே
வம்பவிழ்கொன்றை பசும்பொன்னசும் பொளிர்வார்சடிலப் பெம்மான்
மாலைத்திண்தோள் குழையப்பொருமி வளர்த்த மணிக்கனகக்
கும்பகதம்ப பயோதரி!பூதரி! கொட்டுக சப்பாணி!
கோமளவல்லி! கல்யாணசௌந்தரி கொட்டுக சப்பாணி! (37)

படவரவனைய நிதம்பகதம்பப் பணைமுலை நெடியவிழிப்
பழனக்கடைசியர் குரவைமுழங்கப் பந்திப குந்துநடுந்
தடவயல்மடையில் வரம்பிலரும்பு தழைத்த தடங்காவில்
தாழைவனத்தில் கமுகவனத்தில் தவளமணிக் குன்றில்
புடைபடுநதியில் கரையில்திரையில் புண்டரிகக் சுனையில்
பூமலிமல்லிகை நந்தவனத்தில் பொங்குநிலா வீசிக்
குடவளைதவழ் வளைசையிலுறை பெய்வளை கொட்டுகசப்பாணி!
கோமளவல்லி கல்யாணசௌந்தரி கொட்டுக சப்பாணி! (38)

கச்சைக்கிழியப் பொருமிப்பொருமிக் கண்கள் கறுத்ததுணைக்
கனகக்கொங்கைக் கங்கைக்குவித்தருள் கங்கைப் புனைசடையோன்
இச்சைக்கிழியில் சித்திரமென்ன இருக்கும் பொற்கிளியே!
எழுதியபிரணவ பஞ்சரமன்னி இருந்தகருங் கிளியே!
பச்சைக்கிளியே! காமற்குதவிய பஞ்சவனக் கிளியே!
பல்வளையொலிகெழு கையிலெடுத்துப் பவளக்கனி வாயால்
கொச்சைக்கிளியைக் கொஞ்சுங்கிளியே! கொட்டுக சப்பாணி!
கோமளவல்லி கல்யாண சௌந்தரி கொட்டுக சப்பாணி! (39)

முந்தியஆச்சிர மங்களில்முற்றி முதிர்ந்து முறைப்படியே
மூன்றாமாச்சிர மத்திலிருந்த முனிக்குந் துணைவிக்கும்
சிந்தனைதீரப் பணிவிடைசெய்யுஞ் சிறுமுனிவன் புனலைச்
சென்றுமுகப்பக் குஞ்சரமென்றே செஞ்சர மொன்றுய்ப்ப
அந்தகனோவென் றாருயிர்சோர அயோத்திநகர்க் கிறைவன்
அப்பழிதீர விதிப்படிபத்தியின் அருச்சனை செய்யமலர்க்

கொந்தலர்வில்வ வனத்திலிருந்தவள் கொட்டுக சப்பாணி!
கோமளவல்லி கல்யாணசௌந்தரி கொட்டுக சப்பாணி! (40)

----

5. முத்தப் பருவம்

நறைபட்ட கொன்றைச் சடாடவியின் மேனின்று
நன்னிலந் தன்னில்வீழ்ந்து
நகைவளைத் தெண்டிரைக் கைக்கொண்டு பேராழி
நண்பனை மணந்தகங்கைத்

துறைபட்ட முத்துமத் தலைவனைக் காவேரி
தோய்துறை பணிலமுத்தும்
துள்ளருவி பாயத்தமிழ்ப் பொருநை சேர்கின்ற
துறையில்வளை யீன்றமுத்தும்

குறைபட்ட முத்தமா யெரிபடும் புரைபடும்
கொள்கவெனப் போய்க்கடைபடும்
கூரொளி மழுங்கிநிர்த் தூளிபடு மாதலால்
கொள்ளோம முத்தமெல்லா(ம்)

மறைபட்ட கிண்கிணிச் சிற்றடிப் பொற்றொடி
மணிப்பவள முத்தமருளே!
மலையாசலன் புதல்வி கலியாண சுந்தரி
மணிப்பவள முத்தமருளே! (41)

திருமகள் வயங்குசெந் தாமரையின் முத்தமுந்
தெற்றும் சலஞ்சலத்தின்
தெண்ணிலா முத்தமு(ம்) முடங்கு தடந்திரைத்
திகழ்வலம் புரியின்முத்தும்

பெருமகளிர் கந்தரத் தொளிர்பணில முத்தமும்
பேழ்வாய்வெள் ளிப்பிமுத்தும்
பிறைப்பரு மருப்புப் பொருப்பீன்ற முத்தமும்

பின்னுகிளை துன்னுமுத்தும்

கருமகளிர் குரவைகெழு கழனியில் செந்நெலும்
கன்னலுங் கான்றமுத்தும்
கைக்கொளோ மாகையால் இந்திரன் மகளையும்
கானவர்த(ம்) மகளையுந்தன்

மருமகளெ னப்பெற்ற பொன்னிமய மலைமகள்
மணிப்பவள முத்தமருளே!
மலையாச லன்புதல்வி கலியாண சுந்தரி
மணிப்பவள முத்தமருளே! (42)

தாமரைக் கைக்கொண் டெடுத்துமுத் தாடுமொரு
சைலப்பிராட் டிவட்டத்
தடமுலைப் பாலுண்டு தெய்வமறை முறையிடும்
சரணில் சிலம்பலம்பக்

காமனுக் கபயம் கொடுத்தகைக் கதிர்வளை
கலீரெனக் கண்டுகண்டு
கயிலாய வெற்புக்கோ ரரசென்று வெற்பரசு
கண்கள்களி கூரநறைவார்

தேமலர் குன்றத்த சும்பவிர் பசும்பொனில்
செக்கர்வான் மணிகுயிற்றும்
திருமாளி கைப்பத்தி மத்தியில் தாதியர்கள்
சென்றுநின் றாட்டவொளிரு

மாமணித் தொட்டில் துதைந்தா டுமரகத
மணிப்பவள முத்தமருளே!
மலையாசலன் புதல்வி கலியாண சுந்தரி
மணிப்பவள முத்தமருளே! (43)

தத்து முத்தாடுந் தடந்திரைக் கம்பையிற்
        சம்புவைத் தழுவிநின்ற
தண்காந்த ளங்கையும் பதினாலு புவனமுந்
        தந்தசிற் றுதரமடியு

நத்து முத்தாடுஞ் சிறுக்கந்தரப் பொட்டு
        நகைமுதற் சுவைகளெட்டு
நாட்டுமிணை நாட்டமுங் காணுந்தொ றுந்தனது
        நயனாம்புயங் களித்துக்

கொத்து முத்தாடுமணி முச்சியை முகந்துபைங்
        குதலைமொழி யமுதுபருகிக்
குறுநகை நிலாவுண்டு கனகப் பிராட்டிதன்
        குவிமுலை கொடுத்துமடிமேல்

வைத்து முத்தாடுமொரு பச்சைப் பசுங்கிளி
        மணிப்பவள முத்தமருளே!
மலையாசலன் புதல்வி கலியாண சுந்தரி
        மணிப்பவள முத்தமருளே! (44)

பூமருவு செம்பொற் கடம்பாடவிக் குயில்
        புயற்குல மிறங்குசாரல்
பொதிய வரையில் பயிலு(ம்) மரகதக லாபமயில்
        பொன்னிமய மீன்றபூவை

தேமலர்ச் சோலைதிகழ் வடவரை வளைத்திட்ட
        செந்தேனருந் துபைந்தேன்
செவ்விபெறு மாயிரம டல்செழுந் தாமரைத்
        திருமுகப் பசியவன்னம்

பாமருவு பலகலையும் ஆகமப் பனுவலும்
        பதினெண் புராணவகையும்
பையக்கொ ழுந்துவிடு பூங்கொடியி லோங்கார
        பஞ்சரத்துள் ளிருந்து

மாமறைவ டிக்குமொரு பச்சைப் பசுங்கிளி
மணிப்பவள முத்தமருளே!
மலையாசலன் புதல்வி கலியாண சுந்தரி
மணிப்பவள முத்தமருளே! (45)

பஞ்சானனக் கடவுள் விடமுண்ண அமுதுண்ட
பண்ணவர்கடைந்த தெண்ணீர்ப்
பாலாழி வெண்டிரை தொறுந்தோன்று செந்திருப்
பாவையர் குழாங்கடுப்பச்

செஞ்சாயல் மயிலென விறங்கிக் கொழுங்கைச்
செழுங்குங் குமங்குளித்துச்
செருகுங்க ருங்குழலின் மந்தார மாலையிரு
தீரமுந்தே னிறைப்பத்

துஞ்சாம டந்தையர்கள் ஏந்துமுலை நீந்தும்
துணைபொற் குடங்கள்பொருவத்
துழனியிட் டாடும் தடாகத் தடந்திரை
துள்ளருவி வெள்ளிவரைவாய்

மஞ்சார் நெடுஞ்சாரல் வில்வவன நாயகி
மணிப்பவள முத்தமருளே!
மலையாசலன் புதல்வி கலியாண சுந்தரி
மணிப்பவள முத்தமருளே! (46)

வேறு

எத்தாய்நினைப்போர் மனத்திருளா யெளியேன்விழிக்குச் சுடரொளியாய்
இரண்டாய்மூன்றா யொன்றாகி யெல்லாப்பொருளுந் தானேயாய்ச்
சத்தாய்சத்தாய்ச் சதசத்தாய்த் தயங்குவானந்தப் பொருளாகிச்
சகலபுவனங் களுக்குமொரு தாயாய்மகளாய் வளர்த்தெடுத்த
கைத்தாயருக்குக் கண்மணியாய்க் கன்னித் தமிழ்தேர் கடல்ஞாலங்

காவல்தலைமை பூண்டவளாய்க் கயிலைப்பெருமான் கண்களுக்கு
முத்தாய்வளர்ந்த பெண்பிள்ளாய் முத்தந்தருக முத்தமே!
மும்மைப்புவனம் புரக்குமம்மை முத்தந்தருக முத்தமே! (47)

பழக்கும்மிமிலும் கைமரமும் பாறும்படகுங் கொண்டுசென்று
பாயுந்திரைக்குள் படிந்தெழுந்து பானல்முழுதுஞ் சூறையிட்டுத்
தழல்குன்றெனச் செம்பவளமும்வெண் தவளத்தரளவளை யும்வெள்ளித்
தகடென்றடுக்கு மீன்குவையும் தத்தம்கொழுநர் கொணர்ந்திறைப்ப
வழக்கென்றிருந்து மகளிரெல்லா மணிச்சங்கரிந்து புள்ளோச்சி
வாரிப்பகுத்துப் பொன்கொழித்து மன்றல்மறுகு தொறும்பம்பை
முழக்கும்பரதர் குலக்கொம்பே! முத்தந்தருக முத்தமே!
மும்மைப்புவனம் புரக்குமம்மை முத்தந்தருக முத்தமே! (48)

கொழுங்குங்குமமா முலைமடவார் குரல்வீணையு மத்தளத்தொனியும்
குமுதக்கனிவாய்க் கடைசியர்தங் குரவைத்தொனியுங் குயிலிசையும்
வழங்குங்கொடையில் பெரும்புகழ்சேர் வள்ளியோர்தம் கொடைமுரசு
மாற்றார்படையைப் பொருதடர்த்து வாகைதரித்தோர் திறல்முரசும்
கழங்கும்பயில்பைந் தொடிமலர்க்கைக் கன்னியரை வேற்காளையர்
மங்கலநாண்பூட்டி மணம்புணர் கல்யாணமுரசும் தனித்தனியே
முழுங்கும்வளைசைப் பதிபுரப்பாய் முத்தந்தருக முத்தமே!
மும்மைப்புவனம் புரக்குமம்மை முத்தந்தருக முத்தமே! (49)

பொழியுங்கருவி மழைதூங்கும் பொங்கர்நடுவில் முடப்பலவில்
பொதியுங்குடமுட் கனிதகர்த்துப் பொன்போல்பழுத்த புதுச்சுளைவாய்
வழியுஞ்செழுந்தேன் நெட்டுவிறால் வடிதே னூடு புக்கருந்தி
வள்ளைகுதட்டும் கருமேதி வளவாய்புலரா வகைபெருகும்
செழியன்திருநாட் டினிதுயர்ந்த செல்வப்பழனத் தமிழ்வளைசைத்
தேவர்பணியும் பழந்தேவன் செவியால்பருகு தெள்ளமுதாய்
மொழியுங்குதலைப் பசுங்கரும்பு முத்தந்தருக முத்தமே!
மும்மைப்புவனம் புரக்குமம்மை முத்தந்தருக முத்தமே! (50)

----

6. வாரானைப் பருவம்

பஞ்சவன் புதல்வியாய்த் தமிழ்நாடு காத்திட்ட
பட்டவர்த் தனிவருக!முன்
பனிவரை தவஞ்செய்து பெண்ணர செனப்பெற்ற
பாக்கியப் பேறுவருக!

விஞ்சையரு(ம்) மண்ணவரு(ம்) விண்ணவரு(ம்) நண்ணுமலர்
வில்வவன வல்லிவருக!
வெங்காள கூடவிடம் உண்டகங் களானொடு
விடையில்வரு வாள்வருகவோர்

வஞ்சகமி லாதெனை வளர்த்ததாய் வருகவென்
வாக்கிலுறை செல்விவருக!
வாய்ந்தவென் குலதெய்வம் வருகவென் னிருகண்மணி
வருகவென் னம்மைவருக!

அஞ்சமுடை யான்மறை முழக்கும் வளைசைக்குள்
அகிலாண்ட நாயகிவருகவே!
அந்தரி நிரந்தரி வரந்தரு துரந்தரி
கல்யாணசுந் தரிவருகவே! (51)

கோலக்கு தம்பையணி காதுக்கு மாமணிக்
குண்டலந் தூக்கவருக!
குளிர்தயில மாறாத உச்சிக்கு முச்சியும்
குச்சுந்த ரிக்கவருக!

சாலத்த வழ்ந்தநடை பார்த்தகட் கஞ்சனம்
தானணிய வருகவருக!
சதுர்மறை கள்காணாத சிற்றடிக் கம்பொற்
சதங்கைவட மணியவருக!

பாலொத்த வெள்வளைக் கைக்குநவ மணியிட்ட

பைம்பொன்வளை புனையவருக!
பதினாலு புவனமும் பெற்ற சிற்றுதரப்
பசிக்கமு தளிக்கவருக!

ஆலத்தை யுண்டவர்க் காரமுத மாகவரும்
அசலநாயகி வருகவே!
அந்தரி நிரந்தரி வரந்தரு துரந்தரி
கல்யாணசுந் தரிவருகவே! (52)

வண்டறையு மந்தார மாலைக் கருங்குழல்
வகுப்பிடு நெடும்பின்னலும்
வடிகாது மாமணிக் குண்டலமு மங்கைக்கமண்
டலமு(ம்)மறை யின்முறையும்

விண்டல(ம்) நிறைந்தொளிர் சரற்கால சந்திரமுக
விம்பமுங் கும்பமுலையும்
வெண்கலையு(ம்) மேகலையு மிருபாத பங்கயமும்
விரிமணிப் பரிபுரமு(ம்)மைக்

கண்டல(ம்) நிறைந்ததண் கருணையும் உயர்வரத
கரதலமு மபயகரமுங்
கற்றவர்கள் சித்தாந்த காரஞ்சு ருட்டுமெய்க்
கதிர்நிலவு மெதிரநின்றே

அண்டரவை தெண்டனிடு புண்டரிக மண்டபத்து
அரசவோதிமம் வருகவே!
அந்தரி நிரந்தரி வரந்தரு துரந்தரி
கல்யாணசுந் தரிவருகவே! (53)

வாடுமிடை மேனைதன் மகிழ்ச்சிப் பெருக்கினால்
வாய்மலர்ந் தம்மைவருக
வளருமென் செல்வமே வருக!மகளே வருக!வருக

வெனவிரு கைநீட்டப்

பாடக மலர்ப்பதங் கன்றிச் சிவப்பப்
பயப்பயத் தனிநடந்து
பத்திபெறு முச்சியுந் தொங்கலு மிலங்கப்
பணிச்சுடிகை வெயிலெறிப்பச்

சூடகச் செங்கைக் குறுந்தொடி புலம்பச்
சுடர்த்தரள மாலையாடத்
துணைவிழி களிற்கருணை வெள்ளந் துளும்ப
மெய்ச்சோதி மரகதமெறிப்ப

ஆடகப் பணிவரைப் பச்சைமயில் போலவரும்
அம்மைதிரிபுரை வருகவே!
அந்தரி நிரந்தரி வரந்தரு துரந்தரி
கல்யாணசுந் தரிவருகவே! (54)

மதுகரமு வரியளியு மிஞிறுகளு நனிகுமிறு
மடலிதழி யணியல்சரிய
வரநதியி னிடைகுலவு முடநிலவு படவரவின்
மணிவெயிலி னொளிகவெளிறக்

கதிர்விழியு(ம்) மதிவிழியு(ம்) நுதல்விழியு மிருள்நிலவு
கறைமிடறு மழகுசொரியக்
கரதலமு(ம்) மழுவுமி ளமறியு மரிதாவுபய
கமலபத பரிபுரமெலாஞ்

சதுர்மறையி னோலமிட வரிபிரமர் பணியவுயர்
சபைநடுவில் நடமிடுபிரான்
தசரதனு மவனுடைய தலைமகனு மடிபரவு
தனிமுதல்வனென நெடியபுலியின்

அதளுடைய வுடையனொடு விடையில்வரு மலையுதவும்
அமலை திரிபுரைவருகவே!

அந்தரி நிரந்தரி வரந்தரு துரந்தரி
கல்யாணசுந் தரிவருகவே! (55)

வேறு
கொல்லைக்கமுகின் செம்பழுக்காய்க் குலைகள்சிதற வெடிதாவிக்
கொண்மூவகடு படக்கிழித்துக் குளித்துக்களித்து விளையாடி
எல்லைக்கடங்கா வான்புனலோ டிறங்கிப்புறங் கூர்சாதகத்துக்
கெல்லாம்புதிய விருந்துகொடுத் திறைக்கும்கழு நீர்த்தேனருந்திச்
செல்வக்கயல்கள் புடைசூழச் சினைச்சங்கார்ப்ப மணித்தரங்கச்
சிவிகையேறித் திருவுலாச் செல்லாநிற்குந் தடம்பணைசூழ்
மல்லல்பழைய வளைசைநகர் வாழ்வே! வருகவருகவே!
மலயத்துவசன் பெற்றெடுத்த மயிலே! வருகவருகவே! (56)

விண்ணுக்கடங்கா வான்பொருளே! வேதப்பொருளே! விழுப்பொருளே!
விழிக்குத்துணையே! மொழிக்கரும்பே! விளக்கின்சுடரே! சுடரொளியே!
கண்ணுக்கடங்காப் பேரமுதே! கருணைப்பெருக்கே மதிக்கொழுந்தே!
கண்மூன்றுடைய பெருமானைக் கலந்துபிரியாச் சிறுமானே!
எண்ணுக்கடங்கா அதிசயமே! எண்ணெண்கலைக் குமொருமுதலே!
ஈரேழுலகுக் கொருதாயே! எழுதற்கரிய விசித்திரமே!
மண்ணுக்கடங்காப் புகழ்வளைசை வாழ்வே வருகவருகவே!
மலயத்துவசன் பெற்றெடுத்த மயிலே! வருகவருகவே! (57)

முதிர்சொற்பொருளே மெய்ப்பொருளே முழுத்தமதியே குணநிதியே!
மூலவாகமமே வோதிமமே மூவாமருந்தே பெருவிருந்தே!
குதலைக்கிளியே! தண்ணளியே! குன்றில்பிணையே! உயிர்த்துணையே!
கோலக்கொடியே! குலப்பிடியே! கொடுக்குந்தருவே! செழுந்திருவே!
அதிர்கற்பகமே வனுபவமே வறிவற்புதமே! மரகதமே!
அருட்போரேறே தவப்பேறே! அரனார்பிணையே! அரசனையே!
மதுரக்கனியே! வளைசைமனோன் மணியே! வருகவருகவே!
மலயத்துவசன் பெற்றெடுத்த மயிலே! வருகவருகவே! (58)

சிந்தித்தெழுந்து புனலாடித் திருநீறணிந்து குறைமுடித்துத்
திருச்சந்நிதியில் படிந்தெழுந்து செம்பொற்கோயில் வலம்வந்து
சந்தித்தனந்தம் அஞ்சலிநின் சரணாம் புயத்துக் கினிதியற்றித்
தாள்வாழ்த்தெடுத்து நின்னருளால் தழைக்கும்பெரியோ ருடன்பழகி
எந்தைக்கிசைந்த அஞ்செழுத்து மெம்பிராட்டி திருவுருவாம்
ஏழெட்டெழுத்து முருவேற்றி யிருந்துகணப்போ தானாலும்
வந்திப்பவர்முன் வரும்வளைசை வாழ்வே! வருகவருகவே!
மலயத்துவசன் பெற்றெடுத்த மயிலே வருகவருகவே! (59)

பொருவாள்விதிர்த்துக் கருதலரைப் பொருவாள்வருக வாரிசம்மென்
பூத்தாள்நுண்ணூ லிடையவனி பூத்தாள்வருக வடியவர்க்குத்
தருவாழ்பதமு மெப்பதமுந் தருவாள்வருக மலர்க்கொன்றைத்
தாராள்வருக மலைநிகருந் தனத்தாள்வருக வவிர்பசும்பொன்
உருவாள்வருக மாந்தளிர்ப்பட் டுடையாள்வருக கயிலைவரை
உடையாள்வருக வெனையடிமை யுடையாள்வருக வுயிர்தழைக்க
வருவாள்வருக வளைசைநகர் வாழ்வே வருகவருகவே!
மலயத்துவசன் பெற்றெடுத்த மயிலே வருகவருகவே! (60)

----

7. அம்புலிப் பருவம்

வார்க்கின்ற தேன்கொன்றை மாலைப் பிரானுக்கு
மாலையன் றுதவியென்றும்
வந்திக்கு மிமயவரை யினிதளித் திடவந்து
வழுதிகுல ரத்னமாகிக்

கூர்க்கின்ற வண்கலைகள் விண்டுகொண் டுச்சமரக்
கோலவிடை மேல்விளங்கிக்
கொற்றவே ளுக்கதிக சத்திதந் தெறிபுனல்
குவலயந் தனிபுரப்பாய்

பார்க்கின்ற பொழுதிலித் தன்மையென் னம்மைபெறு
        பான்மையா மேன்மையல்லவோ
பண்புறுந் தோழமைக் காமென்று சுட்டிவிரல்
        பயில்குறிப் பறிவுறுத்தும்

ஆர்க்கின்ற பரிபுரச் சிற்றடிப் பொற்றொடியொ
        டம்புலீ யாடவாவே!
அல்லிமலர் வல்லிதொழும் வில்வவன வல்லியுட
        னம்புலீ யாடவாவே! (61)

கூறுஞ்செழுங் கலைகள் ஒவ்வாயென்று நின்னிடைக்
        குறைபடுமெ னம்மைதன்பால்
குறைவில்லை யிரவுகொண் டுழல்வைநீ யிவளடியர்
        கொடியவிரவைத் தவிர்ப்பாள்

ஏறுங்களங்க வடிவெய் தினைவி ளங்குமிவள்
        என்றுமகளங் கவடிவாள்
எம்பிரானுக் குமொரு கண்ணாவை நீயவற்
        கிருகண்மணி யாகவருவாள்

தேறும்புறத் திருளொதுக் குவாய் நீயிவள்
        திருவுளத்தெண் ணிலன்பர்
சித்தாந்தகார முந்தீர்ந்து விடுமா கையால்
        செப்பிலிவள் அதிகமன்றோ

ஆறங்க நால்வேத மானமுக் கண்ணியுட
        னம்புலீ யாடவாவே!
அல்லிமலர் வல்லிதொழும் வில்வவன வல்லியுட
        னம்புலீ யாடவாவே! (62)

எம்மைவந் தாளுடைய காமாரி பாகத்து
        இருந்தபெருமாட்டி யடியார்க்கு

எப்பதமு(ம்) நல்குவளி ணைப்பதந் தொழுமவர்க்கு
        இடர்செய்வார் தமையடர்ப்பள்

வெம்மைவெங் காளமமென வருமயிடன் முடியுருள
        வெற்றிவடி வாள்விதிர்ப்பள்
விண்ணவர் வெரூஉக்கொள வருந்தார காசுரனை
        வெட்டிவிறல் நட்டமிடுவள்

செம்மையொன் றில்லாத பண்டா சுரன்படச்
        செஞ்சிலை வளைத்துநின்றாள்
திக்கெட்டி னுஞ்செலச் சிங்கவாகன முண்டு
        தேவர்க்கு யாவர்க்குமே

அம்மைகண் சீறிடில் வேறுதிக்கி லையறிந்
        தம்புலீ யாடவாவே!
அல்லிமலர் வல்லிதொழும் வில்வவன வல்லியுட
        னம்புலீ யாடவாவே! (63)

என்றைக்கு நீங்காது நின்தனிர வென்னம்மை
        இன்னருள் கிடைக்கிலேகும்
எறுழ்வலித் தக்கன்முன் னிட்டசா பத்தினால்
        எய்துகய ரோகமும்போம்

கன்றிப்பு கைந்துவெங் காளந்து டிக்கின்ற
        கட்செவிக் கணபணநெடுங்
காகோதரப் பகையு(ம்) மாறுமுட லில்படு
        களங்கமுந் தீர்ந்துவிடலாம்

துன்றிப்பொ லிந்தகலை நிலைபெறப் பெறலுமாம்
        சுரராசன் முதலெவர்க்கும்
துரந்தரப் பட்டமும் சுகவாழ்வு மின்பமும்
        தூயவிவள் கருணைமகிமை

யன்றிக்கி டைக்குமோ வேண்டிய தெலாந்தருவ

ளம்புலீ யாடவாவே!
அல்லிமலர் வல்லிதொழும் வில்வவன வல்லியுட
னம்புலீ யாடவாவே! (64)

கடற்புவி வழுத்து மலயத்துவச னுக்குமொரு
கன்னிகையெனப் பிறந்தாள்
கன்னிநா டாள்கின்ற தென்னர்கோன் மரபிற்கோர்
காரணமெனச் சிறந்தாள்

மடற்கமல பாதாதி கேசவரை தன்னுடைய
வடிவழகு பத்திபாய
மன்னுமோங் காரத்துள் நிலையெனக் கண்ணாடி
வைத்துனைப் பார்க்கவென்றோ

திடப்பட உயிர்ப்பயிர் வளர்க்குமவள் செய்கையைச்
சிந்தித்தி யம்பலாமோ
செப்புமுன் பழமைத் தவங்களோ அறிகிலேந்
திருவுளமகிழ்ந் தழைத்தாள்

அடற்புலி யுடைப்பர னிடப்புடை மடப்பிடியொ
டம்புலீ யாடவாவே!
அல்லிமலர் வல்லி தொழும் வில்வவன வல்லியுடன்
னம்புலீ யாடவாவே! (65)

விண்டலம டங்காத சண்டானி லம்புரவி
வேகந்தழீஇக் கொளத்தேர்
விசைபட நடாத்துமொரு பகலவனிருக் கவவன்
வெய்யவனெனத் தெளிந்தோ

மண்டலமெ டுத்தமுத கிரணனென் றுனையோதும்
வண்மையை யுணர்ந்துதானோ
வலக்கணவ னார்தமதிடக் கண்ணென வெண்ணியோ

வருகவென்று னையழைத்தாள்

துண்டமதி தீரலா முழுமதிய மாகலாந்
துண்ணென்ன வருதியாகில்
சுவர்க்கத் தலத்திடைச் சுரர்கள்குரு பன்னியைத்
தொட்டபாவமு மொழியுமே

அண்டர்வான் முகடளவு வெள்ளிவெற் புடையவளொ
டம்புலீ யாடவாவே!
அல்லிமலர் வல்லிதொழும் வில்வவன வல்லியுட
னம்புலீ யாடவாவே! (66)

சொன்னபடி யிப்படியி லெய்தினால் வெள்ளருவி
துள்ளருமி ராமதீர்த்தத்
துறைபடிந் தாடலாஞ் சரபங்க மாமுனி
சுனைப்புனல் குடைந்தாடலாஞ்

சன்னிதிப் பூஞ்சுனை யாடலாங் கம்புசெறி
சம்புநதி நீராடலாந்
தழைகின்ற வில்லுவத் தண்சோலை நீழலில்
சார்ந்துதகை தீர்ந்துவிடலாம்

பொன்னுலவு திரிகூட மும்பொதிய வெற்புமிரு
புடைதயங்கப் பொலிந்த
பூஞ்சிகர வெள்ளிப் பொருப்பில் புராதனன்
பொற்றாள் பணிந்துய்யலாம்

அன்னபூரணி வளைசை யம்பதியி லம்பிகையொ
டம்புலீ யாடவாவே!
அல்லிமலர் வல்லிதொழும் வில்வவன வல்லியுட
னம்புலீ யாடவாவே! (67)

மேகக் கருங்களிறு கைக்கொண் டெடுக்குமொரு
        வெண்சுதைக் கவளமேயோ
வேனில்வேள் தீபமோ கண்ணாடி யோவொற்றை
        வெள்ளைவட்டக் கவிகையோ

மாகற்ப காடவிமடந் தையர்மலர்க் கையில்
        வைத்தாடு மம்மானையோ
வான்மீயுடுக் கள்பூத் தொளிர்கின்ற வாகாச
        வாவியில் புண்டரிகமோ

பாகப் படுத்துமமு திட்டபொற் றளிகையோ
        பகரிலென் றெண்ணியெண்ணிப்
பார்த்தவர் திகைப்பதை நிவிர்த்திசெய வெண்ணியோ
        பாரிலுனை வருதியென்றாள்

ஆகப் படைக்குமிவள் வேண்டிய தெலாந்தருவ
        ளம்புலீ யாடவாவே!
அல்லிமலர் வல்லிதொழும் வில்வவன வல்லியுட
        னம்புலீ யாடவாவே! (68)

தேனேறு கொன்றைப் புராதனன் றிருமுடி
        பொறுத்ததுன் சிறியவடிவம்
தேவர்தே வாதியர்கிரீ டம்பொறுத் ததிவள்
        சிற்றடிப் பொற்றாமரை

வானேறு கொடுமுடிப் பூச்சக்ர வாளகிரி
        வட்டத்துணீ நிறைந்தாய்
வாக்குமன மெட்டாத நிலையிலே நின்றிவள்
        மனோன்மணீ வடிவமானாள்

மீனேறு சசியெனப் பேருனக் கம்மைகொலு
        வேளைகண் டேவல்செய்யும்
விண்ணில் புலோமசை யுமப்பேர் படைத்தலால்
        மேன்மையென்னோ படைத்தாய்

ஆனேறு கொடியுயர்த்த வளடிவணங் கிவந்
தம்புலீ யாடவாவே!
அல்லிமலர் வல்லிதொழும் வில்வவன வல்லியுட
னம்புலீ யாடவாவே! (69)

பந்தமில் கலைக்கோட்டு மாமுனி பகர்ந்தபடி
பயில்புத்ர காமேட்டிசெய்
பணைமருப் புப்பொருப் பாயிரத் தொகையில்
மேற்படுமுயர் அயோத்திவேந்தன்

எந்தவன முந்திரிந் திரவுவேட் டைக்குழன்று
ஏமாந்து மையிருட்டில்
பாயவெய்து குருபுத்திரன் குண்டிகைப் புனலோசை
இருசெவிபடப் பொறாமல்

வந்தொரு கைக்களி றெனச்சிலை வளைத்ததால்
வந்தபழியைத் தவிர்ப்பான்
மாதவத்தால் கண்டு பூசித்த வெள்ளிவரை
வரதனொடு வீற்றிருந்தாள்

அந்தரத் துழலுமுனை வருதியென் றனள்கருதி
யம்புலீ யாடவாவே!
அல்லிமலர் வல்லிதொழும் வில்வவன வல்லியுட
னம்புலீ யாடவாவே! (70)

----

8. அம்மானைப் பருவம்

ஒளிதூங்கு செக்கர்மணி யம்மானை யாட்டொழிந்து
ஒண்முத்தவம் மனையெடுத்து
ஒவ்வொன்றும் விளையாடு மவ்வேலை செங்காந்தள்
ஒப்பல வெனச்சிவந்த

கிளிதூங்கு கைக்கிடை புகக்கதிரெ றிக்கின்ற
கிளர்மணியம்மா னைபொருவக்
கிரணப் பனிப்பகை யெனக்கண்டு விடுதலில்
கெண்டைக்கெ திர்ந்தகருணைத்

துளிதூங்கு மைக்கண் ணொளிபாயத் துளங்கித்
துளங்குங் களங்கவட்டச்
சோமக்குழா மெனக் கண்டோர் திகைப்பத்
தொகைப்பட நிறைந்துநறவுண்டு

அளிதூங்கு பூங்குழல் செல்வியுட னென்னம்மை
அம்மானை யாடியருளே!
அயிராணி யயிராணி வாணிபணி கலியாணி
அம்மானை யாடியருளே! (71)

எம்மாதி ரத்திருளு மொக்கச் சுருட்டிவிடும்
எரிமணிப்பட நெடும்பாம்பு
இரசதக் கொடியொடு துவர்க்கொடி கள்சுற்றி
வைத்தென்னத் தழைத்தசடிலச்

சும்மாடு கட்டிச் சிவன்சுமக் குங்கங்கை
துண்ணென வணங்கிநின்று
சுருதிமிருதி கள்கருதி யறியாத சிற்றடி
தொழப்பெற்ற தெம்பேறெனச்

செம்மாந்து பேருவகை மீப்பெருகி வழியத்
திரைக்கரத் தாலெடுத்துச்
செறிகுமி ழியம்மானை யாட வவ்வாடல்
சிறப்பிற்கு முடிதுளக்கும்

அம்மானை வைத்தகை யம்மானை மேவுமயில்
அம்மானை யாடியருளே!
அயிராணி யயிராணி வாணிபணி கலியாணி
அம்மானை யாடியருளே! (72)

இருமுழந் தாள்மடித் திடையிடை பதம்பெயர்த்
திருசிலைப்புருவ நெறிவைத்
தெறிவேலெனக் கண்கள் எங்கெங்கு நோக்கிநின்
றேந்துபொற் காந்தளங்கைத்

திருமலர் தனித்துயர்ந் தொளிர்கின்ற மரகதத்
திருமேனி சலனமின்றிச்
சீர்பட வசைத்துமுக மண்ணாந்து கைம்முறை
திறம்பாதிலக் கமேற்றிப்

பரிபுரமு(ம்) மேகலையும் வெள்வளையு மோலிடப்
பட்டுத்தரீய மசையப்
பனுவலாட்டி யுமலர்ப் பாவையும் பாங்குறப்
பச்சைக்கலாப மயில்போல்

அருவிசொரி கயிலைமலை அம்மானை வாழ்த்திநின்
றம்மானை யாடியருளே!
அயிராணி அயிராணி வாணிபணி கலியாணி
அம்மானை யாடியருளே! (73)

விசைபட்ட பைங்காந்த ளங்கரத் தம்மானை
மீமிசைப்பட்ட போழ்தில்
விண்பட்ட சக்ரவாகத் தொகுதி யொத்தன
விருப்பொடு திரும்பிவரலால்

இசைபட்ட பூங்குமுத வொண்முத்த நகைவதனம்
எழுசந்திர விம்பமென்றே
எண்ணிச் சகோரங்கள் வெண்ணிலா வுண்ணலாம்
எனவெண்ணி வருவதொப்பாம்
திசைபட்ட வும்பர்வான் வழியினிடை வரலின்
இந்திரனிளைப் பால்நடக்குஞ்
செய்கையென் றெண்ணலா மெனவாணி துதிசெயத்

திருவுளத் துவகைபொங்கி

அசைபட்ட சிற்றடி மறைச்சிலம் பார்ப்பநீ
அம்மானை யாடியருளே!
அயிராணி அயிராணி வாணிபணி கலியாணி
அம்மானை யாடியருளே! (74)

மோட்டாமை துஞ்சுங் கருந்தெளி தனில்குட
முலைக்கடைசி மார்கள்கூடி
முடிநாறு எடுத்துநட் டொண்புன னிறைத்திட
முருத்துக்குருத் துயிர்த்துக்

காட்டாவுடல் கூன்நிமிர்ந் தெழுந் தள்ளிலை
கறுத்துத்தழைந்து குழைவாய்க்
கால்கொண் டெழுந்துமதி யமுதமுட் புகலும்
கமஞ்சூலுளைந் துகதிரீன்று

ஈட்டாவரும் பெரும்பால் கொண்டு பச்சைமணி
ஈர்ங்குலைவெண் முத்தஞ்சொரிந்
தீன்றபுவியைத் தலைவணங் குவதுபோல் கவிழ்ந்து
இன்னல்தீர்செந் நெல்நிரைகண்

டாட்டாடு மள்ளர்கிளை மிகுபழன வளைசையுமை
அம்மானை யாடியருளே!
அயிராணி அயிராணி வாணிபணி கலியாணி
அம்மானை யாடியருளே! (75)

வேறு

பொருளுணரும் சிவஞானத் தேனே! பொற்கலை
யான்றனக் கிளையமானே!
வரமுதவும் பெருங்கருணை யாறே!
மலையரசி பெற்றெடுத்த பேறே!

இரவுதவிர் கற்பகப் பூங்காவே! எங்கு(ம்)
நிறைந்தார்க் கினியவாழ்வே!
அருள்நிதியே கலியாணித் தாயே
அம்மானை யாடியருளு வாயே! (76)

கொம்பனையார் புனல்மொண் டெடுத்த
குடத்தில் தடத்தில் மலரிடத்தில்
வெம்புசுடர் மறைகாப் புளினமேட்டில்
மலர்கோட் டில்முல்லைக் காட்டில்
செம்பதுமத் தளையவிழ் பழனச்சேற்றில்
வளர்நாற்றில் வாழைத் தாற்றில்
அம்பணிலம் ஊர்வளைசைத் தாயே
அம்மானை யாடியருளு வாயே! (77)

பையரவில் துயிலைய னோடு பனிமலர்
புத்தேளிரும் பராவத்
துய்யமறை எங்கோவென் றரற்றத்
துள்ளுநீர் வெள்ளி வரைப்புறத்தில்
மெய்யடியார் தம்பிறவி மாற்ற வில்வ
வனத்தினில் வந்துதித்த
ஐயர்மகிழ் கலியாணித் தாயே
அம்மானை யாடியருளு வாயே! (78)

முகந்தமுதம் ஊறுபிறை வேணி முடங்கு
வளையிலேறு சறுவாணி
பகர்ந்து மறைதேடிய பவானி
பரம்பொருளை மேவுமபி மானி
இகம்பர மெலாமுதவு வாணீ எனுங்கவிஞர்
நாவிலுறை வாணி
அகண்ட பரிபூரண கலியாணி
அம்மானை யாடியரு ளாயே! (79)

பன்னாளு(ம்) நான்மறைகள் தேடும்
படநாக வார்கழலி னானைப்
பொன்னாடு தேடுபெரு வாழ்வைப்
புண்ணாறு சூலமுடை யானைத்
தொன்னாளி ராமனொடு தாதை
சொன்மாரி தூயடி பராவும்
அன்னானை மேவிய பெண்ணீயே
அம்மானை யாடியரு ளாயே! (80)

----

9. நீராடற் பருவம்

மாலைக் கருங்குழல் சைவல நிகர்ப்பமணி
வார்குழைகள் வள்ளையொப்ப
வாள்முகம் பங்கேருகம் பொருவ மைக்கண்கள்
மடல்நெடுங் குவளைமானப்

பாலைப் பொருந்துநகை வெண்முத்த முறழ்தரப்
பணிமிடறு பணிலமேய்ப்பப்
பவளவிதழ் குமுதங் கடுப்பப் படாமுலைகள்
பற்பமுகிழங்கள் புரையக்

கோலக் குறுஞ்சுழி யொழுங்குபடு உரோமநிரை
கோகனக நாளமாகக்
கோதையர் நெருங்கலா லொழுகுதீம் புனல்மலர்க்
கூட்டமெனும் அவர்கநடுவில்

காலைச் செழுங்கமல வாள்முகத் தன்னமே
கங்கை நீராடியருளே!
கலியாண சுந்தரக் கடவுட் பெண்அமுதமே!
கங்கை நீராடியருளே! (81)

சுற்றமொடு தந்தைதா யில்லியை யொருத்தனைச்
        சூலாயுதக் கடவுளைத்
துரிய துரியாதீத மொக்கக் கடந்திட்ட
        தொல்லையா மெல்லைவெளியில்

குற்றமில் குணத்தனைக் கூவிள வனத்தனைக்
        கொழுமலர ருச்சனைசெய்வான்
கோதற்ற மாமுனிவன் வேண்டலிற் றெண்டிரை
        கொழித்துச் செழித்துவரலால்

அற்றமில் சிறப்புடைய வெள்ளிவரை யாதியாய்
        அள்ளிக்கொள் வெள்ளருவிநீர்
அலைகடனை நதிவரையி லாறிடத் துற்பவித்து
        அடியவர்க் கருள்புரிதலால்

கற்றவர்கள் வரநதி யெனத்துதிக் கப்பெற்ற
        கங்கைநீ ராடியருளே!
கலியாண சுந்தரக் கடவுட்பெண் அமுதமே!
        கங்கைநீ ராடியருளே! (82)

வேறு

ஒருநாள் ஒருபோது ஒருகணம் விட்டொழியா திருக்கு(ம்) மும்மலத்தர்
        உள்ளத் தழுக்கும் புறத்தழுக்கும் ஒக்கக் கழுவி ஊழியெனும்
பெருநாள் தொலைந்துந் தொலையாத பிறப்பு மிறப்பும் தனிதீர்ந்து
        பேரானந்தக் கடல் மூழ்கிப் பிழைத்தீ டேறத்த ழைத்தபசுந்
தருநாண் மலரால் மறைகாணாச் சரணாம் புயத்தை அருச்சித்துச்
        சைவசமயந் தலைநின்ற தகைமை யடியார்களை நயனக்
கருணாநதி நீராட்டு மம்மை கங்கை நதிநீ ராடுகவே!
        கலியாணித் தாய் வெள்ளிவரைக் கங்கை நதிநீ ராடுகவே! (83)

தும்பை முடிக்குஞ் சடைமுடியில் சோமக் கொழுந்து மாரமுதம்
        சொரியுங் கருணைத் திருநோக்கும் சுருதிபயில் குஞ்சிதத் தாளும்
பைம்பொன் இமைக்குந் திருத்தோடும் பங்கேருகக் கைச்சுடர் மழுவும்

பயிலுந் தனக்குஞ் சேருமெனப் பாதிப்படிவம் பகுத்து பன்றிக்
கொம்பை முடவெண் பிறைக்கீற்றைக் கொண்டு பெற்றத் தெழுந்தருளும்
கொன்றைச் சடையெம் பெருமானைக் கும்பிட் டிறைஞ்சிக் குடவளையூர்
கம்பை நதிநீ ராடுமன்னம் கங்கை நதிநீ ராடுகவே!
கலியாணித் தாய் வெள்ளிவரைக் கங்கை நதிநீ ராடுகவே! (84)

அன்னமாடும கன்றுறை வாயி றங்கிப் புறங்கூரி ருட்படலம்
அனையகருங் குந்தளப் பந்தி யசையும் பசுஞ்சைவல நிகர்ப்ப
மின்னுலாவும் தனக்குடங்கள் மிதப்புக் குடங்கள் பொருவமலர்
மென்காந்த ளங்கைக்கதிர் வளைகள் வெள்ளை வளைகட் கெதிரொலிப்பத்
தென்னுலாவும் விழிச் சேலால் செஞ்சேல் வெருவப் பாற்கடலில்
திரைதோறுந் தோன்றும் செழுஞ் செந்திருக் குழாம்போல் முருக்கிதழ்வாய்க்
கன்னிமார்கள் புடை நெருங்கக் கங்கை நதி நீராடுகவே!
கலியாணித் தாய் வெள்ளிவரைக் கங்கை நதி நீராடுகவே! (85)

சுருதிச் சதுர்மறை ஒலிகெழு மறுகும் சொற்றமிழ் பயிலிடமும்
துன்று பொன்மன்றில் நடனஞ்செய் மடந்தையர்சூழ் தெருவும் பெரியோர்
கருதிப் பணியுங் கடவுளர் விழவும் கன்னியர் காளையர்தம்
கடிமண முரசு கறங்கு முழக்கும் கழனித் துழனிகளும்
பரிதிக் கதிர்மறை சோலையு(ம்) மாலைப் பந்தியு(ம்) முந்துபுனல்
பன்மல ரோடையு(ம்) மென்மலர் வழிதேன் பாய்நதியும் பொதியு(ம்)
மருதத் தமிழ்நா டினிது புரந்தவள் வரநதி யாடுகவே!
வளைசை நகர் கலியாண சவுந்தரி வரநதி யாடுகவே! (86)

நின்றுபறித்து நெடுங்கொடி வள்ளையின் நெட்டி குதட்டிமண
நீலக்குவளை யரும்புக ளேகுமுன் னெட்டிதழ் விட்டெழுதேன்
முன்றில்கடந்து கருங்கவரி கணமுகில் புரையச் செறியு(ம்)
முடவுப்பலவின் அடிக்குள டுக்கிய முட்கனி நெக்குடையச்
சென்றடிவைப்பச் செஞ்சுளை கொட்டிய தேறல் சிறுகாலில்
செருத்தல் பனைமுலை கொட்டியபாலுந் திரைஎறியப் பாயு(ம்)
மன்றல்பழனத் தென்னாடு டையவள் வரநதி யாடுகவே!
வளைசைநகர்க் கலியாண சவுந்தரி வரநதி யாடுகவே! (87)

இனமாய் வைத்தநெடும் பழுவேணியில் லேறியெழுந் துறிதொட்டு
இட்டகயிற்றை நெகிழ்த்துக் கையில் எடுத்தசெழுந் தயிரைக்
கனமா வுண்டுதெ விட்டியிறங்கும் காலையில் மழவிடைபோல்
கண்டுபிடித் துரலோடு பிணித்துக் கட்டிக் கள்வனெனத்
தினமாடக் குடமங்கையர் செங்கையின் மத்தால் மொத்துண்டு
சிற்றாய்ப் பாடியில் நெய்ம்மண மாறாச்செம் பவளக்கனிவாய்
வனமாலைத் திருமாலுக் கிளையவள் வரநதி யாடுகவே!
வளைசைநகர்க் கலியாண சவுந்தரி வரநதி யாடுகவே! (88)

கானவிநோ தரிடம்பிரி யாதகருங் குயிலே! மயிலே!
கைக்களி யானைமுகத்தனை யீன்றதோர் கன்னிமடப் பிடியே!
பீனபயோ தரபூதர மேந்திய பெண்மையி ளம்பிடியே!
பிரணவபஞ் சரமன்னிய வன்னப்பிள் ளையிளங் கிளியே!
மோனதியான சமாதிசெய் மாதவ முற்று தவப்பேறே!
முதுமறை முற்றிய உபநிடதத் துமுழுத்த விழுப்பொருளே!
வானதியாக முழங்கு நெடுந்திரை வரநதி யாடுகவே!
வளைசைநகர்க் கலியாண சவுந்தரி வரநதி யாடுகவே! (89)

புண்டரிகத் திலுவந்து வதிந்த பொலஞ்சிறை யோதிமமே!
புண்ணியபூ ரணர்நண் ணியவேத புராதனமெய்ப் பொருளே!
அண்டர்கள் கொண்டவி டாய்தவிரப் பருகாரமு தக்கடலே!
அங்கசனுக்கு வரங்கள் கொடுத்த அருட்பொரு ளாகரமே!
விண்டலமுட்டு நெடுஞ்சிக ரத்தினில் மின்பொதியப் பொலியும்
வெள்ளிவ ரைக்குளிர் துள்ளருவிக்குட வெண்பணிலஞ் சொரியும்
வண்தரளங் களைவண் டலிடுந்திரை வரநதி யாடுகவே!
வளைசைநகர்க் கலியாண சவுந்தரி வரநதி யாடுகவே! (90)

----

10. ஊசற் பருவம்

விரிகின்ற தெள்ளொளிப் பவளக் கொழுங்காலின்
　　மேலிட்ட கோலவயிர
விட்டத்தி லிட்டவட மெண்ணிலா வெண்ணிலா
　　விழுதுவிட் டென்னவீக்கிச்

சொரிகின்ற குழவிவெயில் மழகதிரெ றிக்கின்ற
　　சுடர்மணிப் பலகைமீதில்
தோற்றுநின் தோற்றமப் பரிதிமண் டலமிசைத்
　　தோன்றவருஞ் சோதியேய்ப்பத்

திரிகின்ற கயலெனப் பிறழ்கின்ற துணைவிழிச்
　　சிலைநுதல் கரியகூந்தல்
செந்தாமரைப் பொன்நின் றாட்ட வெண்டாமரைச்
　　சேயிழைதுதிப் பயிமவான்

புரிகின்ற மெய்த்தவ மெனப்பெற்ற கன்னிமயில்
　　பொன்னூச லாடியருளே!
பொற்புருக் கொண்டகல் யாணசுந் தரவல்லி
　　பொன்னூச லாடியருளே! (91)

ஒழுகொளிய மாணிக்கமணி முகப்பிடை வெளியில்
　　ஒள்ளொளிய தூணிரண்டும்
உதயகிரி அத்தமனகிரி யிசைய விடைவிட்டம்
　　ஒளிகொள்பரி வேடமொப்ப

விழுதெனப் பிறழ்கின்ற தரளவட நிலவாக
　　மேயமகடுக் குழாங்கள்
வெண்தார கைக்கணம் பொருவப்பொன் மானநடு
　　விரவுபொற் பலகையின்மேல்

பழகுமின் னமுதவடி வானநின் தோற்றவெண்

பனிமதிக் கடவுளொப்பப்
பத்தர்தஞ் சித்தாந்த காரஞ்சு ருட்டிமெய்ப்
பரமாநுபூதி விளையப்

புழுகொழுகு கும்பக்க தம்பமுலை யன்னமே
பொன்னூச லாடியருளே!
பொற்புருக் கொண்டகல் யாணசுந் தரவல்லி
பொன்னூச லாடியருளே! (92)

பாங்கில் பரப்புமல ரில்லா மலேநின்ற
பைங்கோட் டசோக மெங்கோன்
பாலவிழி யழலினால் தான்பட்ட பாடும்
அப்படை மதன் பட்டபாடும்

தாங்கப் படாதெனத் தவநிலை புரிந்துநின்
சரணாம் புயங்கள் தழுவித்
தண்மலர் சொரிந்திட் டிரண்டறு கலப்புற்ற
தகைபோல் சரண் சிவப்ப

நீங்கப்ப டாதபொற் சிறைவண்டு பண்முரல
நெய்த்த நறையூற் றெடுத்து
நிறைமல ரெனக்கங்குல் பூத்திட்ட மின்மினிகள்
நிறைசந்தனச் செழுங்காப்

பூங்கற்ப கத்தருநி கர்க்கும்வளை சைக்கிறைவி
பொன்னூச லாடியருளே!
பொற்புருக் கொண்டகல் யாணசுந் தரவல்லி
பொன்னூச லாடியருளே! (93)

கங்குல்மங் குல்படல மனையகுழல் சரிதரக்
கழுநீரலங் கலாடக்
காவிவிழி போராட வள்ளைப் பொலங்குழை

கலந்துபொன் னோலையாடத்

துங்கவெங் கட்செவித் துத்திப் பணாமுடிச்
சுடிகைமா மணிகுயிற்றும்
சுடிகைச் செழுந்தொடர் துதைந்தாட மரகதச்
சோதிவெயில் வீசியாடச்

சங்குசங் கத்திடை யுயிர்த்த வெண்முத்திட்ட
தனவுத்த ரீயமாடச்
சதுர்மறையு(ம்) முறையி டுந்தாள் சிலம்பாடச்
சடாமுடிக் காடளாவிப்

பொங்குகங் கைப்புனிதர் நெஞ்சூச லாடநீ
பொன்னூச லாடியருளே!
பொற்புருக் கொண்ட கல்யாணசுந் தரவல்லி
பொன்னூச லாடியருளே! (94)

வழியுஞ் செழும்பவள வெற்பென்னும் வெள்ளைவிடை
வள்ளலைத் தனிபராவி
வழிமுதல் தலைமை யோரீடே றுதற்காக
மாபகீரத னழைப்பப்

பழியுங் கொடுந்து யருநீங்கப் பசும்பொற்
பருப்பதச் சாரல்வாரும்
பண்ணவர்கள் துதிசெயுந் தீர்த்திகை கடுக்கும்
பனைக்கையில் வளைத்துநிழலைச்

சுழியுங் கடக்களிறு பிடியோடு கூடித்
துளைந்தாடு வட்டமடுவைச்
சுற்றுந் தரங்கக் கருங்கடல் எனத்தினந்
துள்ளருவி பொன்னுமுத்தும்

பொழியுந் தடஞ்சாரல் வெள்ளிக்கிரிக் கிறைவி
பொன்னூச லாடியருளே!

பொற்புருக் கொண்ட கல்யாணிசுந் தரவல்லி
பொன்னூச லாடியருளே! (95)

____

உருவப் பெரும்பலகை யிருவினைக் கால்நெஞ்சம்
உயர்விட்டமாசை வடமென்று
ஒழியாம லெளியனேன் போயும்வந் துந்திரியும்
ஊசலாட்டொ ழியும்வண்ணம்

குருவில் சிறந்தநின் மெய்ம்மொழி யிடத்தில்நின்
குளிர்கருணை வடமிசைத்துக்
கூறரிய தானதவ மிருகாலு நிறுவியென்
கொடியநெஞ்சம் பலகையாக்

கருவில் படாதவகை பருவப் படுத்திநீ
காக்கக்கருத் திலெண்ணிக்
கடவுள்மா மறைநின்று முறையிட வதீதம்
கலந்துநிரு வாணவெளியில்

பொருவற்ற ஞானங்கொ ழுந்துபடர் கொளுகொம்பு
பொன்னூச லாடியருளே!
பொற்புரு கொண்ட கல்யாண சுந்தர வல்லி
பொன்னூச லாடியருளே! (96)

____

கருமிடற் றாலந் துளும்பதிரி சூலம்
கபாலங்கரத் திலசையக்
காகோதரப் பட்டநெட் டுயிர்ப் பச்சடைக்
கங்கைநதி பொங்கிவழிய

அருகினில் கிண்கிணிச் சிறுகலெ னக்கிடந்து
அருமறைப் பனுவலார்ப்ப
அளவற்ற கடவுளர்தம் முடிவினுமோர் முடிவின்றி
ஆனந்த நடமியற்றும்

பரிபுரச் சீறடிப் பதுமத்தி லாறடிப்
        பறவையை நிகர்த்தபுந்திப்
பழவடியர் தொழவருள் பழங்கருணை நாயகர்
        பழந்தேவர் மாலைசூட்டும்

புரிகுழல் கற்பகம் பூங்காம வல்லிசெம்
        பொன்னூச லாடியருளே!
பொற்புருக் கொண்ட கல்யாணசுந் தரவல்லி
        பொன்னூச லாடியருளே! (97)

ஒலிகின்ற நான்மறையின் உயர்கிரியை ஞானமென
        ஓதுபொற் றூணநிறுவி
உபநிடத விட்டத்தில் விந்துநா தப்பாசம்
        ஒற்றித்திசைத்து நிலவென்று

இலகின்ற ஓங்கார வட்டப் பெரும்பலகை
        இட்டபொன் னூசலேறி
இனிதி ருந்தாடு முன்சோதித் திருக்கோலம்
        இளஞாயிறு தயமேய்ப்ப

மலிகின்ற தெள்ளுபுனல் துள்ளருவி வெள்ளிவரை
        வாய்முகி லிறங்குசாரல்
வாயிலகு மாணிக்க வெற்புக்கி டந்தந்து
        மரகதக் கிளைகிளைத்துப்
பொலிகின்ற வில்லுவச் சோலையில் கோலமயில்
        பொன்னூச லாடியருளே!
பொற்புருக் கொண்ட கல்யாண சுந்தரவல்லி
        பொன்னூச லாடியருளே! (98)

சேணூட ளாவுமந் தாகினிச் செஞ்சடைச்
        சிவபிரான் சித்தாம்புயம்

திண்பூச லாடவண் டினமூச லாடநறை
        சிந்துமந்தார மணமும்

கோணூடெ ழும்பிறைக் கீற்றமுத மூற்றும்
        குளிர்ந்தபைம் புனலுமாடக்
குழைகளு வளைகளு மிழைகளு மெதிர்ந்தாடல்
        கொண்டாட வொளிருவயிரத்

தூணூடுபச் சைப்பசேல் என்று நின்றிருச்
        சோதிநிற மூசலாடத்
துங்கமலை யரசன்மணி முன்றில் புறத்திலொரு
        தோகைநின் றாடல்போலப்

பூணூசலா டும்படா முலைக் கவுமாரி
        பொன்னூச லாடியருளே!
பொற்புருக் கொண்ட கல்யாண சுந்தரவல்லி
        பொன்னூச லாடியருளே! (99)

சேலோக ருங்கண் சிவப்பொழுகு பவளமோ
        செவ்விதழெனச் செவ்விகூர்
தெய்வப் பிணாக்கள்வாய்த் தெள்ளமுத முண்டவமரர்
        சித்தஞ்சிறப்ப முன்னாள்

மேலோர் கள்மாமறை முழக்கஞ் செயக்கற்பின்
        மேனையரசன் பிறங்கும்
வெற்பிற் புகுந்துநன் திருமங்கலம் பூட்டு
        மேருவரை வில்லிறன்பாற்

சாலோக சாமீப சாரூப சாயுச்சிய
        சகலபதமுந் தழைத்த
தசரதவிரா மீச்சுரம் பெருந் தீர்த்திகைத்
        தண்ணருவி வெள்ளிவரையாம்

பூலோக கயிலாச கிரியிலுறை வாய்வாழி
        பொன்னூச லாடியருளே!

பொற்புருக் கொண்ட கல்யாண சுந்தரவல்லி
பொன்னூச லாடியருளே! (100)

கடையம் கலியாணியம்மை பிள்ளைத்தமிழ் முற்றும்

-------------------------- xxxxxx ---------------------